**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 10 December 2020

# விருதுபெற்ற நெஞ்சு வலி சிகிச்சை நிலையம்

இங் டெங் ஃபோங் மருத்துவமனையிலுள்ள ஆசியாவின் முதல் நெஞ்சு வலி நிபுணத்துவ சிகிச்சைப் பிரிவு, இந்த ஆண்டு ஆசிய மருத்துவமனை நிர்வாக விருதுகளில் நோயாளியின் அனுபவத்தை மேம்படுத்துவதில் உன்னத விருதைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பட்ட இந்த சிகிச்சைப் பிரிவு, இதய வலி உள்ளவர்கள் மருத்துவ வல்லுநரின் சேவை விரைந்து பெற வகை செய்கிறது. மருத்துவப் பரிந்துரை, பரிசோதனை அனைத்தும் ஒரே இடத்தில் செய்யப்படுவதுடன் காத்திருப்பு நேரம், செலவு இரண்டும் குறைக்கப்பட்டுள்ளது.

தேசிய பல்கலைக்கழக இதய மையத்தின் இதயவியல் துறையின் மூத்த ஆலோசகரான டாக்டர் பிபின் கோஜோட்ஜோஜோ தலைமையில் செயல்படும் இச்சிகிச்சைப் பிரிவு, இதுவரையில் புதிதாக நெஞ்சு வலி கண்ட 500க்கும் மேற்பட்ட நோயாளிகளைப் பரிசோத்துள்ளது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.